# தற்காப்புக் கலையிலிருந்து பொழுதுபோக்குக்கலைக்கு மாறிவரும் களியலாட்டம் குறித்த மதிப்பீடு

***சி. ஐஸ்டின் செல்வராஜ்***
*உதவிப் பேராசியர்*
*கவின்கலைகள் மற்றும் அழகியல்துறை*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை*

**முன்னுரை**

களியலாட்டம், இரண்டு கம்புகளைப் பயன்படுத்தி ஆடப்படுகிறது. கம்புகள் மிகச்சிறியதாக இருப்பதினால் களியல் குச்சிகள் என்று அழைக்கப்படுகின்றன1[1]. ஆடுவோர் ஒற்றை வட்டமாகவோ, இரட்டை வட்டமாகவோ நின்று ஆடுவர். ஒருபாடகர்/அண்ணாவி வட்டத்தில் நின்று பாடுவர். பெரும்பாலும் ஆடுவோர் தங்கள் காலில் சலங்கைக்கட்டி ஆடுகின்றனர்.

நாட்டார்கலைகள்/நாட்டுப்புறக்கலைகள் காலஓட்டத்தில் வளர்ச்சி அடைந்த இக்கலைகளை தொன்மக்கலை (Primitive Arts), நாட்டுப்புறக்கலை (Folk Arts), செவ்வியல்கலை (Classical Arts) பல செவ்வியல் கலைகளுக்கு (ClassicalArts) நாட்டார்/நாட்டுப்புறக்கலைகள் பெருந்துணையாக இருந்துள்ளன. பண்டைய கூத்துக்களிலிருந்தே நாடகங்கள் தோன்றியுள்ளன. பலவிதமான ஆடல்கள் நாடகங்களில் இணைந்துள்ளதைக் காணலாம். நாட்டுப்புற மக்களின் நாடகங்களான பள்ளு, குறவஞ்சி, நொண்டி, குளுவம், கூத்து ஆகியவற்றிலிருந்து இலக்கியங்களும், திருத்தமுடைய நாடகக்கலையும் தோன்றி வளர்ந்துள்ளது[2].

**களியல் ஆடும் மக்கள் மற்றும் சூழல்**

தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் களியலாட்டம் பரவலாகக் காணப்படுகின்றது. நாடார், பறையர், கோலியான், பரதவர், ஈழவர் போன்றோர்கள் களியலாட்டம் ஆடிவருவது குறிப்பிடத்தக்கது. பொதுவாக பரதவர் களியல், நாடார்களியல் என்ற அடையாளத்துடன் களியல் ஆட்டம் குறிப்பிடப்படுவதும் கவனிக்கத்தக்கது. மேற்குறிப்பிட்ட வட்டாரங்களில் உடற்பயிற்சிக் கல்வியாகக் களியல் ஆடப்பட்டுள்ளது[3]. திருமணம், கொடைவிழா, வரவேற்பு, பூப்பு நன்னீராட்டு, புதுமனைப் புகுவிழா, பள்ளி விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளில் இன்றும் களியலாட்டம் நிகழ்த்தப்படுகிறது.

**பெயர்க்காரணம்**

‘களி’ என்ற சொல்லுக்கு ‘இன்பம்’, ஆட்டம் என்ற இரு பொருள்கள் உள்ளன. மலையாள மொழியில் ஆட்டத்தைக் ‘களி’ என்று தான் குறிப்பிடுகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ‘கழிகளை அடித்து ஆடுவதால் ‘கழியல்’ என்ற பெயரே பொருத்தம ‘உடையது’ என்பாரும் உள்ர்[4]. உதாரணமாக. கதிரேசன் அவர்கள் குறிப்பிடும் வாதம் இங்குக்குறிப்பிடத்தக்கது. என்னவென்றால், படைத்தலிலிருந்து படையல் துவைத்தலிலிருந்து துவையல் பொரித்தல் என்பதிலிருந்து பொரியல் குளித்தலிலிருந்து குளியல் வடித்தலிலிருந்து வடியல் என்று பலசொற்கள் மாற்றமடைந்து வழங்கப்படுவது போன்று ‘களித்தல்’ என்ற சொல்லிலிருந்து ‘களியல்’ என்று ஆகயிருக்க வேண்டும்[5]. கேரளத்தில் இக்களியலாட்டம் கோலடி, கோல்களில்[6] கம்படிக்களி[7] என்ற பெயர்களால் வழங்கப்படுகிறது. கோல்களி, கம்படிகளி என்ற சொற்களிலுள்ள ‘கோல்’, ‘கம்பு’ என்பவை மறைந்து ‘களி’ என்ற சொல்லின் முக்கியத்துவத்தினாலும் பொருத்தத்தினாலும் ‘களித்தல்’ என்ற

---

1 ஏ. என். பெருமாள், 2003:82
2 மேலது. 2003:171
3 கட்டளைக் கைலாசம், 2009:9
4 அன்னசெல்வம், 1986:16
5 கு. கதிரேசன், 2000:2
6 அன்னசெல்வம், 1986:16
7 சு. சண்முகசுந்தரம், 1985:209

சொல்லாகிப்பின் ‘களியல்’ என்று மாறியிருக்க வேண்டும்.[8] திருநெல்வேலி மாவட்டத்தில் இக்களியலாட்டம் ‘விளையாட்டு’ என்று அழைக்கப்படுவதா்காக. கதிரேசன் பதிவு செய்கிறார்.

**கம்புஆட்டங்கள் (Stick Dances)**

1. போர் நடனங்கள்
2. போர்த் தன்மையில்லாக் கம்பாட்டங்கள்
3. தரையில் குறுக்கும் நெடுக்குமாக உள்ள இரண்டு கம்புகளுக்கு உள்ளும் புறமாக ஆடும் குறுக்குக் கம்பாட்டங்கள்
4. திரையில் ஊன்று கோலாகக் கம்புகளைப் பயன்படுத்தி ஆடும் ஆட்டம்
    1. மரக்கால்ஆட்டம்
    2. விவசாயக்குறியிடாகஆடப்படும்பழங்காலஆங்கிலநாடகம்
    3. இசைக்கருவியாக, கம்புகளைப்பயன்படுத்துதல்

**இந்தியாவில் கம்பு ஆட்டங்கள்**

1. ஆகிர்ஆட்டம் (உ.பி)
2. கதிகம்பாட்டம் (வங்காளம்)
3. கார்பாநடனம் (குஜராத்)
4. பாங்க்ரா (பஞ்சாப்)

**தமிழ் நாட்டில் கம்பு ஆட்டங்கள்**

1. கைச்சிலம்பாட்டம்
2. சிலம்பாட்டம்
3. கோலாட்டம்
4. பொடிக்களியாட்டம்
5. களியலாட்டம்
6. வைந்தனை
7. அயிலந்தரை

**களியலாட்டம் ஒரு நிகழ்கலை**

கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டப் பகுதிகளில் வில்லிசை, கணியான் கூத்து முதலிய நாட்டுப்புறக் கலைகளில் இன்றும் குத்து விளக்கு ஏற்றிவைக்கும் வழக்கம் இருக்கின்றது. ஆரம்பகாலத்தில் தீவட்டிகள் மற்றும் குத்து விளக்குகளைப் பயன்படுத்தியதாகவும் பின்எண்ணெய் விளக்குகள், மண்ணெண்ணை விளக்குகள், பெட்ரோமாக்ஸ் விளக்குகள் பயன்படுத்தப்பட்டதையும் அறிய முடிகிறது. தற்பொழுது மின் விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன.

**விருத்தம்**

களியலாட்டத்தின் தொடக்க நிலையாக அமைவது ‘வணக்கவிருத்தம்’ ஆகும். வணக்க விருத்தத்தில் அண்ணாவி இறைவனுக்கும் அதனைத் தொடர்ந்து கற்றுத்தந்த அண்ணாவிக்கும் வணக்கம் கூறுவார்.

**களியலாட்டம்**

களியலாட்டம் எட்டு பேர் வட்டமாக நின்று ஆடக்கூடியதாகும். அண்ணாவியோடு பக்கப்பாட்டுகாரர்களையும் சேர்த்து பத்து அல்லது பதினாறுபேர் அடங்குவர். ஆட்டக்காரர்களில் எட்டுபேருக்கும் அதிகமாகவோ குறைவாகவோ ஆடக்கூடிய நிலையும் உள்ளது. ஆனால் எட்டு பேர் ஆடும் ஆட்டமே சிறப்பாக அமையுமென கலைஞர்கள் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. களியலாட்டம் ஆடும் முறைகளில் ஆறுநிலைகள் இருக்கின்றன. அவை,

1. ஆரம்ப ஆட்ட நிலை
2. தயார் ஆட்ட நிலை
3. சாதாரண ஆட்ட நிலை

[8] கு. கதிரேசன், 2000:2

4. வேக ஆட்ட நிலை
5. மின்னல் வேக ஆட்ட நிலை
6. இறுதி ஆட்ட நிலை

என்பவையாகும்.

**ஆரம்ப ஆட்ட நிலை**

விருத்தம் பாடுபவரின் குரலும் கலைஞர்களின் ஏகக்குரலும் தான் கேட்கின்றன. இத்தன்மைகளைக் கொண்ட ஆட்டத்தின் முதல்நிலையே ஆரம்ப ஆட்ட நிலை என்று கூறப்படுகிறது.

**தயார் ஆட்ட நிலை**

அண்ணாவி ஜாலரையும் கலைஞர்கள் கம்புகளையும் கொண்டு ஆடுவதற்குத் தயாராக இருக்கும் நிலையே ‘தயார் ஆட்டநிலை’ எனப்படுகிறது. சில சமயங்களில் அண்ணாவிகள், ரெடி… ரெடி… என்ற ஆங்கில வார்த்தையைக் கூறி ஆட்டத்தை நடத்துவதும் அதற்குப் பதிலாக ஆட்டக் கலைஞர்கள் ரெடி என்ற சொல்லைப் பயன்படுத்தி கம்படிப்பதும் உண்டு.

**சாதாரண ஆட்ட நிலை**

சாதாரண ஆட்ட நிலையில் பாடல்கள் இராகத்துடன் பாடப்படுகின்றன.

**வேக ஆட்ட நிலை**

**மின்னல் வேக ஆட்டநிலை**

**இறுதி ஆட்ட நிலை**

**ஆட்டத்தின் அடிவைப்பு முறைகள்**

**சரளி/சரவளி:** மின்னல்வேக ஆட்ட நிலையில் பின்பற்றப்படும் அடிவைப்பு முறையே சரளி பாவெட்டு/போவெட்டு மல்லிகை அல்லது சுத்து ஆறடிச்ச மல்லிகை அல்லது தன்னாள் சுத்து பின்னல் ஆள் பின்னல் இவை தவிர, ஒத்தக்கம்பு, இரட்டைக்கம்பு, மூணுகம்பு, நாலுகம்பு, பத்துக்கம்பு, பூட்டுக்கம்பு, வெட்டுக்கம்பு, வீச்சுக்கம்பு, கம்பு போட்டுப் பிடித்தல் போன்றகலைச் சொற்களும் களியலாட்டத்தோடு தொடர்புடைய வார்த்தைகளாகும்.

**காலெடுப்புமுறை**

ஆட்டம் சிறப்பாக அமைய வேண்டுமானால், காலெடுப்பு முறை சிறப்பாக அமைதல் வேண்டும். குமரிமாவட்டத்தில் வெட்டி கேறிப்போதல், வெட்டி இறக்கம், வளையப்பேசுதல் என்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் கால் ஏற்றிப்போதல், கால் இறக்கிப் போதல், கால் வளைத்துப் போதல், கால் நீட்டிப் போதல், கால் மடக்கிப் போதல், கால் பாய்தல், உட்கார்ந்து போதல், நொண்டிப் போதல் போன்றச் சொற்களால் குறிக்கப்படுகின்றன.

**உடல் அசைவுமுறைகள்**

அலுக்கல் (பாவெட்டுக்கும் சரளிக்கும் இடைப்பட்ட நிலையில்)

குலுக்கல்

வளைத்தல் (அழகுணர்ச்சிக்காக)

பின்விளைத்தல் (மலத்தல்)

**களியலாட்டவகைகள்**

தமிழ்நாட்டில் கிழக்குக் கடற்கரையோரம் வாழும் மீனவர்கள் மத்தியில் களியலாட்ட வகையான பொடிகளியலாட்டம் காணப்படுகின்றது. குறிப்பாக பாண்டிச்சேரி, நாகப்பட்டினம் பகுதிகளில் காணப்படுகின்ற ஒன்றாக இருக்கின்றது. சிறிய கம்புகளைப் பயன்படுத்துவதால் ‘பொடிகழி’ என்று இது அழைக்கபடுகிறது. எட்டு முதல் பதினாறு ஆண்கள் இதில் ஆடுகிறார்கள். பெண்கள் பாட்டுப் பாடுகிறவர்களாகஇருப்பர். மேற்குறிப்பிட்ட பகுதிகளில் காணப்படும் பொடி களியலாட்டமானப் பாடல்களானது முருகக்கடவுளை வழிபடுவதாகவே பாடல்கள் அமைந்துள்ளது[9]. அடவு என்பது ஆடலின் ஒரு ஆதாரப்பகுதியைக் குறிக்கும் இது நடனத்தின் ஓர் அளவை என்றே

---

[9] ஏ. என். பெருமாள், 2003:83

கூடக்கொள்ளலாம். தமிழில் ‘ஆடல்’ என்ற வேர்ச்சொல்லைக் கொண்டது அடவு[10]. களியலாட்டத்தில் பின்வரும் ஆட்ட வகைகள்அதன் உட்கூறுகளாக வகைப்படுத்தப்படுகிறது.

1. குருவாட்டம்
2. கப்பலாட்டம்
3. இராட்டாட்டம்
4. கொக்காட்டம்
5. கயிறுபின்னலாட்டம்
6. கும்மிக்களியலாட்டம்
7. ஒயில்களியலாட்டம்
8. மாரடியாட்டம்
9. வாழத்தாட்டம்
10. அனுமனாட்டம்

ஆட்டத்தின் முடிவுநிலை ‘மங்களம்’/’வாழி’ பாடி ஆடப்படுகிறது. இசுலாமியர்களின் ஆட்டநிலை இந்து, கிறித்தவக்களியல் ஆட்டங்களில் மங்கள – வாழி என்ற முடிவு நிலை போன்று இருப்பதில்லை.

**களியலாட்டத்தோடு தொடர்புடைய பிற கலைகள்**

1. கும்மி
2. ஒயில்
3. கோலாட்டம்
4. வில்லிசை
5. சிலம்பம்
6. மாரடிப்பாட்டு
7. திரையிசைப்பாடல்கள்

இதனையே, இவ்வாறு வகைப்படுத்தலாம்

**தமிழகக்கோலாட்டம்**
**பெண்கள்**

1. கோலாட்டம்
2. பின்னல்கோலாட்டம்
3. அயிலந்தரை
4. கும்மி

**பொது**

1. கும்மி
2. பின்னல்

**ஆண்கள்**

1. வைந்தானை
2. பொடிக்களி
3. கட்டைக்கும்மி
4. கிருஷ்ணன்துள்ளல்
5. களியல்

களியலில் பாடப்படும் பாடலின் அடிப்படையில் இவ்வாறு வகைப்படுத்தலாம்,

**விருத்தம்**

1. தெய்வம்
2. தனிமனிதர்

[10] பத்மா சுப்பிரமணியன், 1986:86

**நிகழ்ச்சிசூழல்**
**தெய்வங்கள்**

1. இந்து
2. கிறித்தவம்
3. இசுலாம்

**சமுதாயம்**
தனிமனிதர்
பொது

**பொது**
**கும்பிடு முறைப் பாடல்கள்**

1. தெய்வம்
2. ஆசான்
3. தலைவர்
4. பொது

**மங்களம்**

1. தெய்வம்
2. பொது

**களியலாட்டத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (போர் பயிற்சி - சடங்குநிலை - ஆட்டக்கலை)**

களியலாட்டத்தின் பயிற்சி நிலை, குருவணக்கம் முதலியவை களரிப்பயிற்றின் பயிற்சி நிலையையும் குருவணக்கத்தையும் நினைவூட்டுகின்றன. களியலாட்டக் கலைஞர்களுக்குக் குரு, தன் கையால் கம்பு எடுத்துக் கொடுப்பது, களரிப் பயிற்றில் உள்ள குரு கச்சைக்கட்டிவிடும் தன்மையை உணர்த்துகிறது. கருவி களரிப்படையில் பார்த்தோம் என்றால் களியலாட்டத்தில் ஓரடிக்கம்புகளும், களரிப்பயிற்றில் ஈரடிக்கம்புகளும் பயன்படுத்தப்படுகின்றன. இசைக் கருவிகளாகக் களியலாட்டத்தில் தவில், மிருதங்கம் பயன்படுத்தப்படுகின்றன களரிப் பயிற்றில் உறுமி பயன்படுத்தப்படுகிறது[11].

ஒவ்வொரு நாட்டுபுறக்கலைக்கும் தற்காலத்தில் இருக்கின்ற உருவமும் உள்ளடக்கமும் எப்பொழுதும் மாறாமல் இருந்ததில்லை. ஆக களியலாட்டத்தின் தோற்றத்தினையும் அதனைத் தொடர்ந்த வளர்ச்சி நிலைகளையும் இத்தகையப் பின்னணியில் தான் நாம் கவனிக்கவேண்டும். அரசு என்ற நிலையில் அதனைத் தொடர்ந்து அதனைப் பாதுகாக்கும் பொறுப்பு என்பது 'படை' என்ற அமைப்பிற்கு முக்கியமானதாகப்படுகிறது. ஆகவே அரசர்கள் படைவீர்களுக்குக் கடுமையான போர்ப்பயிற்சிகளை அளித்துள்ளனர். அந்த வகையில் களியலாட்டத்தைப் பார்க்கும்பொழுது/அனுமானிப்பதற்கு இன்றைய களியலாட்ட அசைவு முறைகள் தூண்டுதலாக விளங்குகின்றன. கம்புகளை வைத்து ஆடும் முறையும், கால் அடிவைப்பு முறைகளும், குதித்தல், வளைந்து போதல் முதலிய உடல் அசைவுகள் அடங்கிய முறைகளும், பங்கேற்பாளர்களாக ஆண்கள் பெறும் விதமும் போர்ப்பயிற்சிக் கூறாகவே இதனைக் காணமுடிகின்றது. இரண்டு இணையாக ஆடப்படும் ஆட்டமான இதில் குறிப்பிட வேண்டிய விஷயம் என்னவென்றால் தன் எதிர்வரும் கலைஞரின் கம்புகளும் அடித்து அவரைக்கடத்தல், ஆட்டத்தின் போதுஆட்டக்காரர் 'தன்னாள்' - 'எதிராள்' என்று மோதுகின்றநிலை போர் முறையினை நமக்கு உணர்த்துகிறது.

போர்பயிற்சிக் கலையான 'களரிப் பயிற்று' அசைவு முறைகள், களியலாட்டக்கலையின் அசைவு நிலைகளோடு தொடர்புடையனவாகவே காணப்படுகின்றன. களரிப்பயிற்றில் காலைத்தூக்கி மாற்றிமாற்றி அடியெடுத்து, தரையைத் தொட்டுவணங்குவர். களரிப்பயிற்றின் இந்நிலை களியலாட்டக்கலைஞர்கள் கையில் கம்புகளுடன் தரையைத் தொட்டு வணங்கிவிட்டு கால் அடிவைப்பு முறைகளை களியல் கலைஞர்கள் கையாளுவது, போர்ப் பயிற்சிக் கலையான களரிப் பயிற்றிலிருந்து களியலாட்டம் தோன்றியது என்ற கருத்தை வலியுறுத்துவதாகவே நாம்

[11] மேலது. பக்.3

காணமுடிகிறது. சடங்குகளில் பாவனை செய்தல் என்பது மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. அந்த வகையில் “போருக்கு அடிப்படையாக விளங்கும், போர்ப் பயிற்சி முறைகளைப் பாவனை செய்யும் ஓர் சடங்காக மாறியிருக்கலாம்” எனக்கூறும் கு. கதிரேசன்கருத்து கவனிக்கத்தக்கது. ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னர், மரபான போர்ப் பயிற்சி/போர்க்கலை முறைகள் அனைத்தும் விளையாட்டாக மாற்றம் பெற்றிருந்தது. ChummerChoondal குறிப்பிடுவது போல் ‘சவிட்டு நாடகம்’ கதை மாந்தர்களான மன்னர்கள், மந்திரிகள், வீரர்கள் துப்பாக்கிப் பயன்படுத்தி சண்டையிடுவதினைக் குறிப்பிடுகிறார். ஆக ஐரோப்பியர்களின் இந்திய வருகைக்குப்பின் இந்தியாவில் பெரும்பாலான மரபுவழியிலான போர்ப் பயிற்சியானது வீர விளையாட்டுக்களின் வரிசையில் பட்டியலாகி விட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

வீர விளையாட்டாக மாறிய கலை வடிவங்கள் பாடல், இசை போன்றவை சேர்க்கப்பட்டு பெருநில மற்றும் குறுநிலச்சுவான்தார்களின் மனமகிழ்ச்சிக்காக ஆட்டமாக உருவாகியது. ஆட்டத்திற்கான பாடல்கள் புராணக்கதைகளை உள்ளடக்கியவைகளாக மாறின. இதையே “புராணங்கள் தோன்றிய பின் அவற்றின் கதைப்பொருள்கள், கலைகளின் உள்ளடக்கமாக மாறியது” என்று நா. வானமாமலையின் கூற்றும் கவனிக்கத்தக்கது. குரு-சிஷ்யன் என்ற உறவு நிலை களியலாட்டம் ஒருகலையாக இருந்த பொழுது இருந்தது. ஆனால் அதுவே ஆட்டக்கலையாக மாறியபின் கலைஞர்கள் இல்லையெனில் அண்ணாவி இல்லை என்ற நிலையாக இருந்தது.

**முடிவுரை**

தற்காப்புக்கலை வடிவமாகப் பெற்றிருந்த களரிப்பயிற்றும் களியலாட்டவடிவம் பெற்றதும் ஒருவகையில் பரிணாமநிலையில் இன்னொரு வளர்ச்சி நிலையாகவேக் கொள்ளவேண்டும். கேரளத்தில் தோன்றிய இக்களியலாட்டம் பல்வேறு இடங்களுக்குப் பரவியது. அவ்வாறு பரவும் பொழுது அந்தந்த மண்ணின் தன்மைகளுக்கேற்ப பல மாற்றங்களையும் ஏற்றங்களையும் பெற்று ஒருமன மகிழ்வு ஆட்டக்கலையாக உருவாகிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டப் பகுதிகளில் காணப்படும் களியலாட்டப் பாடல்களில் காணலாகும் “கன்னியாகுமரி தாயே எங்கள் கவலை தீர்ப்பவளே…” என்ற வரிகள் குமரி மாவட்டத்திலிருந்து பரவியிருக்கக்கூடும் என்ற முடிவிற்கு வர முடிகிறது. அதில் காணலாகும் அடவுகள் அனைத்தும் களரிப்பயிற்றின் அடவுகளை அடியொற்றியிருப்பதால் பண்டையத் திருவிதாங்கூர் பகுதிகளானவை (இன்றைய தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் கேரளப் பகுதி) களிலிருந்து பரவியிருக்கக் கூடும் என்ற நிலைக்கு வரமுடிகிறது. களரிப்பயிற்றின் அடவுகள் பின்னால் வந்த பலநாட்டுப்புறக்கலைகளின் கூறுகளாக அமைந்தன. களியலாட்ட அடவுகள் களரிப்பயிற்றிலிருந்து தான் பெறப்பட்டன… களியலாட்டம் களரிப்பயிற்றிலிருந்து தான் தோன்றியிருக்க முடியும் என்ற கருத்துக்களானது, ஜேக்கம் கிரிம் அவர்கள் கூறியது போன்று ‘புராணங்களிலிருந்து தான் நாட்டுப்புறக்கதைகள் கிடைத்தன…’ என்றவாதத்திற்கு வலு சேர்க்கும் விதமாகவே உள்ளது. மேலும் elitist கோட்பாட்டின்படி செவ்வியலிலிருந்து நாட்டார்மயமாக்கப்படுகின்ற வாதமும் இங்கு கவனிக்கத்தக்கதாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் தோன்றலாம். ஆனால் இங்கு கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் செவ்வியல் அல்லது அறிவார்ந்த சமூகபடைப்புகள் ஏன் நாட்டார் மத்தியில் பரவலாக்கம் செய்யப்படவேண்டும், என்ன நோக்கத்திற்காக அவை பரப்பப்பட்டிருக்கவேண்டும் என்ற கேள்விகளும் எழத்தான் செய்கின்றன.

**பார்வை நூற்கள்**


1. பெருமாள் ஏ. என், பார்வை நூற்கள் 2003. தமிழக நாட்டுப்புறக் கலைகள், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
2. கதிரேசன் கு, 2000. நாட்டுப்புறக்கலையும் பண்பாடும் (களியலாட்டம்), திருநெல்வேலி: கதிர்பதிப்பகம்
3. பத்மாசுப்பிரமணியம், 1985 பரதக்கலைக் கோட்பாடு, சென்னை: வானதிபதிப்பகம்